**இலங்கை மன்றம் - 2023**

-----------------------------------------------

**1. நிதிக் கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இலங்கை மன்றத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்கள் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்கள் தொடர்புடைய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, மன்றத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, மன்றத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது மன்றத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர

தொடர்ந்தியங்கும் அடிப்படையின் மீது கணக்கீடு செய்தல் மற்றும் மன்றம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துதல் முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

மன்றத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் இலங்கை மன்றத்தியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவணையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- மன்றத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு மன்றத்தின் உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். அத்துடன் அந்த வெளிப்படுத்தல்கள் போதியளவினதாக காணப்படாவிடின் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் மீது தொடர்ந்தியங்கும் நிலைமை முடிவடையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- மன்றத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- மன்றத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கூட்டுத்தாபனம் இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணக்கமின்மை

| | உரிய நியமங்களுடன் தொடர்பு மற்றும் இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 07 இன் பந்தி 55 இற்கு இணங்க, 2018 ஆண்டின் போது மோட்டார் வாகனமொன்று மீள்மதிப்பீடு செய்த போது ரூபா 1,100,000 இற்கான மீள் மதிப்பீட்டு மிகை இனங்காணப்பட்டிருந்தது. குறிப்பிட்ட மோட்டார் வாகனம் 2022 ஆண்டில் அப்புறப்படுத்தப்பட்ட சந்தர்ப்பத்தில் அதற்குரிய மீள்மதிப்பீட்டு மிகை திரண்ட நிதியத்திற்கு மாற்றப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக மீளாய்வாண்டின் திரண்ட நிதியம் ரூபா 1,100,000 தொகையினால் குறைவாக காட்டப்பட்டிருந்தவுடன் மீள்மதிப்பீட்டு மிகை ரூபா 1,100,000 தொகை அதிகமாகக் காட்டப்பட்டிருந்தது. | 2024 ஏப்ரல் 30 திகதியிலுள்ளவாறு சரி செய்யப்பட்டு கணக்குகளில் சீராக்கல் மேற்கொள்ளப்பட்டது. | நியமத்திற்கு இணங்க மோட்டார் வாகன அப்புறப்படுத்தும் சந்தர்ப்பத்தில் மீள் மதிப்பீட்டு மிகை திரண்ட நிதியத்திற்கு மாற்றப்பட வேண்டும். |
| (ஆ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 07 இன் பந்தி 21 இற்கு இணங்க மீளாய்வாண்டின் ஆதனங்கள் பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்களில் அடங்கியுள்ள ரூபா 1,404,519 இற்கான இரண்டு கட்டிட திருத்த வேலைகளை கட்டிட நிர்மாண வேலைகள் என இனங்காணப்பட்டிருக்காமையால் கட்டிட சொத்துக்கள் ரூபா 1,404,519 இற்கான பெறுமதியினால் மிகையாகக் காட்டப்பட்டு கட்டிடத் திருத்தவேலைச் செலவுகள் ரூபா 1,404,519 இனால் குறைவாக காட்டப்பட்டிருந்தமையால் அதற்கு நேரொப்ப பெறுமானத் தேய்வுச் செலவு ரூபா 44,713 இனால் மிகையாக இனங்கண்டிருந்தமையால் ஆண்டிற்கான மிகை ரூபா 1,359,806 இற்கான பெறுமதியினால் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது. | 2024 மே மாதம் சரி செய்யப்பட்டு கணக்குகளில் சீராக்கல் மேற்கொள்ளப்பட்டது. | நியமத்திற்கு இணங்க சொத்துக்களுக்காக மேற்கொள்ளப்படும் திருத்த வேலை செலவுகளை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும். |

### 1.5.2 தொங்கல் கணக்கு

| விடயம் | தொகை | தொங்கல் என காட்டப்பட்டிருந்த காலம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| தொங்கல் கணக்கு | ரூபா 189,587 | 2015 - 2023 | முகாமைத்துவ சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டு தொடர் நடவடிக்கை எடுப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | தொங்கல் கணக்கு மீதியை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.5.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| விடயம் | தொகை | வழங்கப்படாத கணக்காய்வுச் சான்றுகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| கட்டிட திருத்த வேலைகள் | ரூபா 26,846,285 | நடைமுறை வேலைகள் தொடர்பாக மதிப்பீடொன்று பெற்றுக்கொள்வதற்காக நியமனம் செய்யப்பட்ட குழுவின் அறிக்கை | நடைமுறை வேலை தொடர்பாக மற்றும் தொடர் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டிய முறை தொடர்பாக விசாரணை செய்வதற்கு நியமனம் செய்யப்பட்ட குழுவின் பரிந்துரையின் படி தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. குழுவின் அறிக்கை உடனடியாக சமர்ப்பிக்கப்படும். | குறிப்பிட்ட அறிக்கை கணக்காய்விற்காக தாமதம் இன்றி சமர்ப்பிக்க வேண்டும். |

## 1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெற வேண்டிய தொகை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2010 ஆண்டு முதல் 2023 ஆண்டு வரை இலங்கை மன்றத்தினால் நடாத்தப்பட்டிருந்த கல்வி நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் செயலமர்வுகளுக்காக பல்வேறு நிறுவனங்களிலிருந்து பெற வேண்டிய ரூபா 15,144,408 தொகை மற்றும் 2014 ஆண்டு முதல் 2023 ஆண்டு வரை தொழில் அபிவிருத்தி பிரிவினால் வெளித்தரப்பினருக்கு வழங்கப்பட்ட சேவைகளுக்காக அறவிடப்பட வேண்டிய ரூபா 2,093,692 | கல்விப் பிரிவின் 2023 ஆண்டிற்கு முன்னர் காணப்பட்ட மீதிகளில் இருந்து தற்போது ரூபா 388,786.96 மற்றும் தொழில் அபிவிருத்திப் பிரிவின் ரூபா 6,300 தொகையொன்று அறவீடு செய்யப்பட்டதுடன், மீதித் தொகையையும் அறவீடு செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தொகை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | |
| (ஆ) | இலங்கை மன்றத்தின் இலக்கம் 123 கொண்ட peo TV அலைவரிசை, திரைக்கூடம், நிருவாக வளாகம், உற்பத்தி உபகரணங்கள் மற்றும் குறிப்பிட்ட சேவைகள் வாடகை அடிப்படையில் வழங்குவது தொடர்பான உடன்படிக்கையின் படி 2022 மற்றும் 2023 ஆண்டுகளுக்காக முறையே ரூபா 1,269,792 தொகை மற்றும் ரூபா 8,724,248 தொகை வீதம் கூட்டுத்தொகை ரூபா 9,994,040 தொகை அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது. மேலும், கட்டிட வளாகத்தின் மற்றும் அலை வரிசையின் மாதாந்த குத்தகையை தீர்மானிக்கும் போது அரச பெறுமதி மதிப்பீடும், சந்தையில் தற்போது நிலவும் விலைகளையும் மதிப்பாய்வு செய்திருக்காததுடன், திறைகூடம் மற்றும் அதில் காணப்படும் உற்பத்தி உபகரணங்களின் பாதுகாப்பு மற்றும் உளமை தொடர்பாக பாதுகாப்பு வைப்பொன்று (Security bond) பெற்றுக்கொள்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கடன் தொகையை தீர்க்கும் படி அறிவித்து குறிப்பிட்ட நிறுவனங்களுக்கு பல சந்தர்ப்பங்களில் எழுத்துமூலம் அறிவிக்கப்பட்டிருந்தது. அவர்கள் அந்த பணம் செலுத்தலை புறக்கணிக்கும் சர்ந்தர்ப்பத்தில் நீதிமன்ற நடவடிக்கை எடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. மேலும், இது தொடர்பாக நி.பி. 104 இன் கீழ் விசாரணையொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | 2017 ஆண்டின் போது இரண்டு வெளித் தரப்பினருக்கு சேவை வழங்கியது தொடர்பாக அறவிடப்பட வேண்டிய ரூபா 397,005 இற்கான மீதி மீளாய்வாண்டு இறுதியளவிலும் அறவீடு செய்ய முடியாமல் இருந்தது. | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டங்களில் கலந்துரையாடி பரிந்துரை பெற்றுக்கொண்டு தொடர் நடவடிக்கை மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.6.2 முற்பணங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| செலுத்த வேண்டிய கணக்குகளின் கீழ் காட்டப்பட்டிருந்த ரூபா 4,863,414 இற்கான கிடைத்த முற்பண மீதியில் இனங்காணப்படாத நேர் வைப்பு என 2021, 2022 மற்றும் 2023 ஆண்டுகளில் முறையே ரூபா 471,970 தொகை ரூபா 568,750 தொகை மற்றும் ரூபா 1,234,743 தொகை காணப்பட்டது. நிறுவனத்தின் வங்கிக் கணக்கிற்கு வெளித்தரப்பினரால் வைப்புச் செய்யப்படட்டிருந்த மேற்கூறிய | 2021, 2022 மற்றும் 2023 ஆண்டுகளின் போது வங்கிகளில் வைப்புச் செய்யப்பட்டிருந்த இனங் காணப்படாத சேமிப்பு மீதிகளை சீராக்கல் செய்வதற்கு மற்றும் 2024 ஆண்டு ஆரம்பத்திலிருந்து இனங்காணப்படாத செலவு வைத்தல்களை சீராக்கல் மேற்கொள்வதற்காக விஷேட | குறிப்பிட்ட மீதிகளை இனங்கண்டு விரைவாக தீர்க்க வேண்டும். |

| | |
|---|---|
| மீதிகளை இனங்கண்டு அவற்றை தீர்த்திருக்கவில்லை. | வேலைத் திட்டமொன்றும் ஏற்படுத்தப்பட்டிருந்தது. |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) தாபனக் கோவையின் அத்தியாயம் V இன் பந்தி 2.1 | ஏற்பாடுகளுக்கு முரணாக இலங்கை கடற்படையின் லுதினன் கமான்டர் பதவியில் கடமையாற்றிய உத்தியோகத்தர் ஒருவருக்கு அரச கூட்டுத்தாபனம் ஒன்றில் கடமை மேற்கொள்வதற்காக தற்காலிகமாகவோ அல்லது நிரந்தரமாகவோ அரசாங்க சேவையிலிருந்து விடுவிக்கப்பட்டிருக்காத போது 2021 ஆகஸ்ட் 02 திகதி இலங்கை மன்றத்தின் பணிப்பாளர் (நிருவாகம்) பதவியில் கடமையாற்றுவதற்காக ஏற்றுக்கொண்டிருந்தார். | ஆரம்ப விசாரணையின் பரிந்துரைகள் மே 16 திகதியில் நடைபெறும் முகாமைத்துவ சபை கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டு தொடர் நடவடிக்கை எடுப்பதற்கு தீர்மானிக்கப்படவுள்ளது. | தாபனக் கோவையின் ஏற்பாடுகளுக்கு இணங்க செயற்பட வேண்டும் என. |
| (ஆ) தாபனக் கோவையின் அத்தியாயம் vii இன் பந்தி 12.2.5 | ஏற்பாடுகளுக்கு முரணாக இலங்கை மன்றத்தின் பணிப்பாளர் (கல்வி) பதவியில் கடமை அணவல் செய்வதற்காக 2021, 2022, 2023 ஆண்டுகளின் போது ரூபா 599,979 இற்கான தொகையொன்று பதில் கடமை படி என செலுத்தப்பட்டிருந்தது. | வெகுசன ஊடக அமைச்சின் செயலாளரினால் செலுத்தப்பட்டிருந்த ஊதியத்தை திருப்ப அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கும் படி அறிவிக்கப்பட்டது. அது தொடர்பாக அடுத்த முகாமைத்துவ சபைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டு பொறுத்தமான நடவடிக்கை எடுக்கப்படும். | ஊதியத்தை திருப்ப அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) அரச தொழில் முயற்சிகள் திணைக்களத்தின் 2021 நவம்பர் 16 திகதிய வழிகாட்டல் கோவையின் அத்தியாயம் 2.3 | ஏற்பாடுகளுக்கு இணங்க, 2023 திசெம்பர் 31 திகதி அளவிலும், 2023 ஆண்டிற்கான கூட்டிணைந்த திட்டமொன்று தயாரித்திருக்காததுடன், அதற்காக 14 உத்தியோகத்தர்களுக்கு | 2024 – 2028 வரையான காலத்திற்காக தயாரிக்கப்பட்டிருந்த கூட்டிணைந்த திட்டம் 2024 பெப்ரவரி 14 திகதி வெகுசன ஊடக அமைச்சின் | ஏற்பாடுகளுக்கு இணங்க குறிப்பிட்ட காலப் பகுதிகளுக்குள் கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டு அங்கீகாரம் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | ரூபா 82,135 செலவொன்று மேற்கொண்டு வெளி விடுமுறைகளிப்பிடம் ஒன்றில் செயலமர்வொன்று நடாத்தப்பட்டிருந்தது. | செயலாளருக்கு சமர்ப்பிக்கப்பட்டது. | பெறப்பட வேண்டும். |
| (ஈ) | 2001.03.137 இலக்கங் கொண்ட முகாமைத்துவ சபைத் தீர்மாணம் | ஏற்பாடுகளுக்கு இணங்க, அனைத்து விரிவுரையாளர்களும் 2023 ஆண்டின் போது மாதாந்த முன்னேற்ற அறிக்கைகள் பேணிச் சென்றிருக்கவில்லை. | மாதாந்த முன்னேற்ற அறிக்கைகள் சமர்ப்பிக்கும் படி கல்வி பதவியணியினருக்கு அறிவிக்கப்பட்டது. | அனைத்து விரிவுரையாளர்களும் மாதாந்த முன்னேற்ற அறிக்கைகள் பேணிச் செல்ல வேண்டும். |
| (உ) | 1995 செப்தம்பர் 07 திகதிய 887/8 இலக்கம் கொண்ட வர்த்தமானி | மூன்றாம் நிலை தர மற்றும் தொழில் பயிற்சி பாடநெறிகள் நடாத்தப்படுகின்ற நிறுவனங்கள், மூன்றாம் தர மற்றும் தொழில் கல்வி ஆணைக்குழுவில் (TVEC) தமது நிறுவனத்தினால் நடாத்தப்படுகின்ற பாடநெறிகளை பதிவு செய்து, வருடாந்தம் பதிவு செய்தலை புதுப்பிக்க வேண்டும். மன்ற நிறுவனத்தினால் 2023 திசெம்பர் 31 திகதி அளவிலும் நடாத்தப்படுகின்ற 43 பாடநெறிகள் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. | 26 பாடநெறிகள் மூன்றாம் நிலை மற்றும் தொழில் கல்வி ஆணைக்குழுவில் பதிவு செய்யப்பட்டுள்ளது. மேலும், 15 பாடநெறிகளை பதிவு செய்வதற்காக விண்ணப்பிக்கப்பட்டுள்ளது. மேலும், NVQ தரத்தை பெற்றுக்கொள்ளல் செய்முறையொன்று தற்போது ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவில் பதிவு செய்து வருடாந்தம் பதிவு செய்தலை புதுப்பிக்க வேண்டும். |
| (ஊ) | தாபனக் கோவையின் அத்தியாயம் xii இன் பிரிவு 14.3.3 | முழுச் சம்பளத்துடனான கல்வி விடுமுறை தொடர்பான விண்ணப்பம் தாபன பணிப்பாளருக்கு சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும், நிறுவனத்தில் கடமையாற்றும் இரண்டு விரிவுரையாளர்களுக்கு 2 வருடங்களும் 06 மாத காலத்திற்காக முழுச் சம்பளத்துடனான கல்வி விடுமுறை வழங்கப்பட்டு ரூபா 8,030,919 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | அனைத்து கொடுப்பனவு மேற்கொள்ளல்களும் மற்றும் விடுமுறைகள் வழங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதற்கு முன்னர் முகாமைத்தும் இணங்கியிருந்த நிபந்தனைகளின் படியே ஆகும். | தாபனக் கோவை ஏற்பாடுகளுக்கு இணங்க முழுச் சம்பளத்துடனான கல்வி விடுமுறைக்காக தாபனப் பணிப்பாளரின் அங்கீகாரம் பெறப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (எ) | தாபனக் கோவையின் அத்தியாயம் xii இன் பிரிவு 14.6 | நிறுவனத்தின் இரண்டு விரிவுரையாளர்களுக்கு 02 வருடங்களும் 06 மாத காலத்துக்காக முழுச் சம்பளத்துடனான கல்வி விடுமுறைக்காக கடமையாற்ற வேண்டிய கட்டாய சேவைக் காலத்திற்கான உடன்படிக்கையொன்றுக்கு அணுகியிருக்கவில்லை. | எதிர் காலத்தில் தாபனக் கோவை மற்றும் குறிப்பிட்ட சுற்றறிக்கை ஏற்பாடுகளின் படி முறைசார் விதமாக உடன்படிக்கைகளுக்கு அணுகுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | தாபனக் கோவையின் ஏற்பாடுகளுக்கு இணங்க உடன்படிக்கைக் கு அணுக வேண்டும். |
| (ஏ) | 2021 நவம்பர் 16 திகதி அரச தொழில்முயற்சிகள் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டிருந்த அரச தொழில் முயற்சிகள் தொடர்பான வழிகாட்டல் கோவையின் ஐந்தாவது அத்தியாயத்தின் இணைப்பு 01 | நிறுவனத்தினால் பிரதான செயலாற்றுகை சுட்டிகள் அறிமுகப்படுத்தியிருந்த போதிலும் (KPI) அவற்றை மதிப்பாய்வு செய்து அவற்றின் மூலம் நிறைவேற்றிய அளவு எவ்வளவு என (outcome) பரிசோதனை செய்திருக்கவில்லை. | 2024 முதல் 2028 வரை கூட்டிணைந்த திட்டத்தில் இந்த மூலப் பிரமாணங்கள் உட்படுத்தப்பட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் இந்த குறைபாட்டினை நிவர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | அரச தொழில் முயற்சிகள் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டிருந்த வழிகாட்டல்களுக் கு இணங்க அறிமுகப்படுத்தியுள்ள செயலாற்றுகை சுட்டிகளை மதிப்பாய்வு செய்து நிறைவேற்றியிருந்த அளவினை சுட்டிக்காட்ட வேண்டும். |
| (ஐ) | பெறுகை வழிகாட்டல் கோவையின் பிரிவு 5.3.1(ஈ) மற்றும் பிரிவு 2.6.1(அ)(ii) | ஏற்பாடுகளுக்கு இணங்க, மன்றத்தினால் மீளாய்வாண்டின் போது மேற்கொண்டிருந்த ரூபா 2,631,835 தொகை பெறுமதியான 04 பெறுகைகளுக்காக விலை கூறல்கள் அழைத்த பின்னர் தொழில்நுட்ப மதிப்பாய்வு குழு நியமணம் செய்யப்பட்டிருந்தது. | குறைபாடுகள், தாமதங்களை தவிர்த்துக்கொண்டு வளங்களை சிக்கனமாக செயற்திறனுடன் மற்றும் ஆக்கபூர்வமாக பயன்படுத்தி பெறுகை அலுவல்கள் மேற்கொள்வதற்கு தேவையான அடிப்படை தயாரிக்கப்பட்டுள்ளது. | பெறுகை வழிகாட்டல் கோவையின் ஏற்பாடுகளுக்கு இணங்க தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழு நியமனம் செய்யப்பட வேண்டும். |

## 1.8 வரி பிரமாணங்களுடன் இணங்காமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2022/2023 மதிப்பீட்டு ஆண்டுக்கான முற்பண தனிப்பட்ட வருமான வரி திரட்டு, மதிப்பீட்டு ஆண்டு முடிவடைந்து வரக்கூடிய ஏப்ரல் 30 திகதி அல்லது அதற்கு முன்னர் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் 2023 திசெம்பர் 31 திகதி அளவிலும் குறிப்பிட்ட திரட்டுக்கள் உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை. | குறிப்பிட்ட தினத்தில் செலுத்த வேண்டிய தொகையை செலுத்தியிருந்ததுடன், 2023 ஆண்டிற்கான திரட்டுக்கள் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் அறிவுரையை பெற்று நிகழ்வு நிலை ஊடாக தற்போது சமர்பிக்கப்பட்டிருந்தது. | குறிப்பிட்ட தினத்தில் வரித் திரட்டு உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 8,806,726 இற்கான மிகையொன்று காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மிகை ரூபா 53,397,480 தொகையாக காணப்பட்டது. அதன்படி, நிதி விளைவுகளில் ரூபா 44,590,754 இற்கான பின்னடைவொன்று அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டின் போது திறைச்சேரியில் இருந்து கிடைத்திருந்த மானியங்களை கணக்கீடு செய்யும் போது வருடாந்தம் பிற்போடப்பட்ட வருமானத்திலிருந்து கிரமமான குறைத்தல் என இனங்காணப்பட்ட வருமானம் ஏனைய வருமானங்கள் என இனங்காணப்படாமை இந்த பின்னடைவுக்கு பிரதானமான காரணமாக இருந்தது.

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 இனங்காணப்பட்ட நட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை மன்றத்தின் பணிப்பாளர் (கல்வி) பதவியில் கடமையாற்றிய உத்தியோகத்தர் 2020 ஆகஸ்ட் 28 திகதி முதல் நிரந்தமாக ஓய்வு பெறச் செய்திருந்தமையால் இலங்கை மன்றத்திற்கு எதிராக அந்த உத்தியோகத்தினால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் 2023 ஜுலை 07 திகதிய வழக்குத் தீர்ப்பின் படி அவருக்கு உரித்தான அனைத்து நிலுவைச் சம்பளங்களும் செலுத்துவதற்கு மற்றும் பணிப்பாளர் (கல்வி) பதவியில் மீண்டும் | பதில் அனுப்பியிருக்கவில்லை. | முகாமைத்துவத்தினால் நிறுவனத்திற்கு பிரதிகூலம் அல்லாத வகையில் சரியான தீர்மானங்கள் எடுப்பதற்கு பொறுப்பாக இருக்க வேண்டும். |

சேவையாற்றுவதற்காக நிறுவுதல் மேற்கொள்ளப்பட்டிருந்தது, நிறுவனத்திற்காக சேவை ஆற்றாத 2019 ஏப்ரல் முதல் 2023 நவம்பர் வரையான நிலுவைச் சம்பளம், ஊழியர் சேமலாப நிதியத்திற்காக பங்களிப்பு தொகை, ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியப் பங்களிப்பு தொகை, சட்டத்தரணி கட்டணம் என முறையே ரூபா 4,041,301 தொகை, ரூபா 1,132,573 தொகை மற்றும் ரூபா 135,908 தொகை மற்றும் ரூபா 390,466 தொகையாக கூட்டுத்தொகை ரூபா 5,700,250 இற்கான மேலதிக கிரயமொன்று மேற்கொள்வதற்கு நேரிட்டிருந்தது.

## 3.2 செயற்பாட்டுத் திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2023 ஆண்டின் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் படி, இலங்கை மன்றத்தினால் 82 பாடநெறிகள் மற்றும் செயலமர்வுகள் நடாத்தியதன் மூலம் ரூபா 124,328,000 இற்கான வருமானம் ஒன்று பெற்றுக்கொள்வதற்காக திட்டமிடப்பட்டிருந்த போதிலும், 2023 ஆண்டின் போது அந்த பாடநெறிகளில் மற்றும் செயலமர்வுகளில் 65 தொகை (79 சதவீதம்) நடாத்துவற்கு முடியாமல் இருந்தமையால் ரூபா 95,618,000 தொகைக்கான எதிர்பார்த்த வருமானத்தை (77 சதவீதம்) இழந்திருந்தது. | முறையான மற்றும் விஞ்ஞான ரீதியான செய்முறையொன்று இன்றி இந்தத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டிருந்தமையால் இவ்வாறான நிலைமைகள் ஏற்பட்டிருந்ததுடன், எதிர் காலத்தில் இந்த நிலைமையை தவிர்த்துக்கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | செய்முறைசார் நிலைமைகளை கவனம் செலுத்தி திட்டங்கள் தயாரிக்கப்பட வேண்டியதுடன், திட்டத்தின் செய்பணிகளை நிறைவேற்ற வேண்டும். |
| (ஆ) | இலங்கை மன்றத்தினால் பாடநெறிகள் நடாத்துவதற்காக 13 அங்கீகரிக்கப்பட்ட விரிவுரையாளர் பதவிகள் காணப்பட்டதுடன், உள்ளவாறான விரிவுரையாளர் எண்ணிக்கை 09 ஆக இருந்தது. இந்த விரிவுரையாளர்களுக்காக 2023 ஆண்டின் போது சம்பளம் மற்றும் படிகள் என ரூபா 13,108,487 தொகை செலுத்தப்பட்டிருந்தது. தெரிவுப் பரிசோதனையின் போது 2023 ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்த 21 பாடநெறிகளில் 04 பாடநெறிகளுக்காக வெளி விரிவுரையாளர்களின் வளப் | பாடநெறிகளில் விடயங்கள் தற்போதைய விரிவுரையாளர்களின் விடயப் பரப்பினுள் அடங்காத சந்தர்ப்பங்களில் வெளி விரிவுரையாளர்களின் சேவையை அதிகமாக பெறுவதற்கு நேரிடுகின்றது. இதில் 04 பதவிகளை நிரப்புவதற்காக அமைச்சரவை அங்கீகாரம் கிடைக்கப் பெற்றுள்ளதுடன், மீதியான வெற்றிடங்களை நிரப்புவதற்காகவும் அங்கீகாரம் | தற்போது நிரந்தர பதவிகள் வகிக்கும் விரிவுரையாளர்களின் மூலம் உச்சமட்ட சேவையின் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பங்களிப்பு மாத்திரம் பெற்றுக்கொண்டிருந்ததுடன், மன்றத்தின் நிரந்தர விரிவுரையாளர்கள் இந்த பாடநெறிகளின் கூட்டிணைப்பு அலுவல்கள் மாத்திரம் மேற்கொண்டிருந்தனர். மேலும், 12 பாடநெறிகள் வெளி விரிவுரையாளர்களின் வளப் பங்களிப்பு 75 சதவீதத்தை மிகைத்திருந்தது. | பெற்றுக்கொள்வதற்காக கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. | |
| (இ) | 2023 திசெம்பர் 31 திகதி அளவில் 2019 ஆண்டு முதல் 2023 ஆண்டு வரை ஆரம்பிக்கப்பட்டு நடாத்தப்பட்டு வந்த பாடநெறிகள் மற்றும் செயலமர்வுகள் 85 இல் 30 பாடநெறிகளுக்காக 2023 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 62 நாட்களுக்கும் 742 நாட்களுக்கும் இடைப்பட்ட கால தாமதம் ஏற்பட்டிருந்ததுடன், பாடநெறிகளை பூர்த்தி செய்வதற்காக 90 நாட்களை விட மிகையான காலம் தாமதித்திருந்த 28 பாடநெறிகளும் அவற்றில் 365 நாட்களை விட கால தாமதம் ஏற்பட்டிருந்த 08 பாடநெறிகளும் காணப்பட்டது. | 2019 – 2021 ஆண்டு வரை நிலவிய கொவிட் 19 தொற்றுநோய் நிலைமை காரணமாக பாடநெறிகள் திட்டமிடப்பட்டுள்ளவாறு நடாத்துவதற்கு பாதிப்புக்கள் ஏற்பட்டிருந்ததுடன், இந்த நிலைமையில் 2023 ஆண்டு இறுதியளவில் திருப்திகரமான மட்டத்தை அடைவதற்கு இயலுமாக இருந்தது என. | உரிய காலத்தில் பாடநெறிகளை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | 2023 ஆண்டிற்காக ஆரம்பிக்கப்பட்டிருந்த 26 பாடநெறிகள் மற்றும் செயலமர்வுகளில் 11 பாடநெறிகள் மற்றும் செயலமர்வுகள் (42%) செயல் நடவடிக்கை திட்டத்தின் படி திட்டமிட்டிருக்காத பாடநெறிகள் மற்றும் செயலமர்வுகளாக காணப்பட்டதுடன் இரண்டு விரிவுரையாளர்களினால் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் படி நடாத்த வேண்டிய பாடநெறிகள் மற்றும் செயலமர்வுகளில் ஒரு பாடநெறி (0%) அல்லது ஆரம்பித்திருக்காததுடன், ஏனைய விரிவுரையாளர்களினால் செயல் நடவடிக்கை திட்டத்தின் படி நடாத்தப்பட்ட பாடநெறிகள் மற்றும் செயலமர்வுகள் 5 சதவீதத்திற்கும் 50 சதவீதத்திற்கும் இடைப்பட்ட சதவீதத்தில் காணப்பட்டது. | முறையான மற்றும் விஞ்ஞானபூர்வமான செய்முறையொன்று இன்றி இந்தத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டிருந்தமையால் இவ்வாறான நிலைமைகள் ஏற்பட்டிருந்ததுடன், எதிர் காலத்தில் இந்த நிலைமையை தவிர்த்துக்கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | செயல் நடவடிக்கைத் திட்டத்திற்கு இணங்க பாடநெறிகளை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.3 பெறுகை முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | திறைசேரிச் செயலாளரின் 2021 செப்தம்பர் 29 திகதிய அரச நிதிச் சுற்றறிக்கை 01/2021 இல் பிரிவு 2.3 இற்கு இணங்க சமூக அடிப்படை அமைப்புக்களுக்கு நேரடியாக ஒப்பந்த வேலைகள் சாட்டும் போது குறிப்பிட்ட சங்கத்தின் தகுதியை மதிப்பாய்வு செய்வதற்காக பயன்படுத்தக்கூடிய மூலப் பிரமாணங்கள் தொடர்பாக கவனம் செலுத்தாமல் போலியான வங்கிக் கணக்கு விபரங்கள் சமர்ப்பித்திருந்த ஒப்பந்த வேலையாளருக்கு ரூபா 2,653,342 தொகை பெறுமதியான ஊழியர் விடுதியின் கழிவரை முறையை திருத்தும் ஒப்பந்த வேலை வழக்கப்பட்டிருந்தது. | குறைபாடுகள், தாமதங்களை தவிர்த்துக்கொண்டு வளங்களை சிக்கனமாக செயற்திறனுடன் மற்றும் ஆக்கபூர்வமாக பயன்படுத்தி பெறுகை அலுவல்கள் மேற்கொள்வதற்கு தேவையான அடிப்படை தயாரிக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்க சமூக அடிப்படை அமைப்புக்களுக்கு நேரடி ஒப்பந்த வேலைகள் சாட்டுதல் செய்யும் போது அந்த சங்கத்தின் தகைமையை மதிப்பாய்வு செய்வதற்கு பயன்படுத்தக்கூடிய மூலப் பிரமாணம் தொடர்பாக கவனம் செலுத்த வேண்டும். |
| (ஆ) | ரூபா 252,500 பெறுமதியான சமையலறை குளிர்அறை திருத்த வேலை மேற்கொள்ளும் ஒப்பந்த வேலைக்காக தெரிவு செய்யப்பட்டிருந்த ஒப்பந்தக்காரருடன் குறிப்பிட்ட விடயங்களுக்காக உடன்படிக்கை மேற்கொள்ளாமல் திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், இந்த திருத்த வேலைகளுக்காக ரூபா 75,000 இற்கான மேலதிக செலவு மதிப்பீடொன்று குறிப்பிட்ட ஒப்பந்தக்காரரினால் வழங்கியிருந்தது. அதனை தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழு பரிந்துரைத்திருந்த போதிலும் பெறுகைக் குழுவின் அங்கீகாரத்திற்காக சமர்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், இந்த திருத்த வேலை முறையான மேற்பார்வையொன்று இன்றி மேற்கொள்ளப்பட்டிருந்தமையால், புதிய பெறுகை ஒன்று மேற்கொண்டு புதிய இயந்திரமொன்று பொருத்துவதற்கு நேரிட்டிருந்தமையால் நிறுவனம் ரூபா 1,012,500 இற்கான மேலதிக செலவொன்றை மேற்கொண்டிருந்ததுடன், குளிரறை செயற்படாமையின் காரணமாக ரூபா 26,920 இற்கான உணவு இருப்பொன்று பழுதடைந்திருந்தது. | குறைபாடுகள், தாமதங்களை தவிர்த்துக்கொண்டு வளங்களை சிக்கனமாக செயற்திறனுடன் மற்றும் ஆக்கபூர்வமாக பயன்படுத்தி பெறுகை அலுவல்கள் மேற்கொள்வதற்கு தேவையான அடிப்படை தயாரிக்கப்பட்டுள்ளது. | பெறுகை வழிகாட்டல் கோவையின் ஏற்பாடுகளுக்கு இணங்க பெறுகை செயற்பாடுகள் செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | பிரதான கேட்போர் கூடத்தின் கதவுகள் பொருத்துதல் தொடர்பாக பெறுகையின் போது அதற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த விலைகூறல்களை மதிப்பாய்வு செய்யும் போது நிர்மாண வேலை கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை (CIDA) பதிவு செய்திருக்காமை என்ற நிபந்தனையின் மீது 03 வழங்குனர்களின் விலைகூறல்கள் தள்ளபடி செய்வதற்காக தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுவின் பரிந்துரையின் மீது பெறுகைக் குழு செயற்பட்டிருந்தது. விலைகூறல்களை அழைப்பதற்காக வழங்குனர்களை தெரிவு செய்யும் போது கவனம் செலுத்த வேண்டியிருந்த அடிப்படைத் தகைமைகள், விலைகூறல்களை மதிப்பாய்வு செய்யும் போது பயன்படுத்திய காரணத்தினால் போட்டி ரீதியான விலைகூறல்கள் சமர்ப்பிக்கப்படுவதற்கு தடைகள் ஏற்பட்டிருந்தது. | குறைபாடுகள், தாமதங்களை தவிர்த்துக்கொண்டு வளங்களை சிக்கனமாக செயற்திறனுடன் மற்றும் ஆக்கபூர்வமாக பயன்படுத்தி பெறுகை அலுவல்கள் மேற்கொள்வதற்கு தேவையான அடிப்படை தயாரிக்கப்பட்டுள்ளது. | பெறுகை வழிகாட்டல் கோவையின் ஏற்பாடுகளுக்கு இணங்க பெறுகை செயற்பாடுகள் செயற்பட வேண்டும். |

### 3.4 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 ஆகஸ்ட் 02 திகதி இலங்கை மன்றத்தின் பணிப்பாளர்(நிருவானம்) கடமையை ஏற்றுக்கொண்டிருந்த உத்தியோகத்தர் இலங்கை கடற்படை சேவையில் 2021 நவம்பர் 05 திகதி ஓய்வு பெற்றிருந்ததுடன், 2021 ஆகஸ்ட் 02 திகதி முதல் 2021 நவம்பர் 05 திகதி வரையான காலப் பகுதியில் இலங்கை மன்றம் மற்றும் இலங்கை கடற்படை ஆகிய இரண்டு நிறுவனங்களிலிருந்து சம்பளங்கள் மற்றும் படியாக முறையே 495,759 தொகை மற்றும் ரூபா 319,669 தொகை பெறப்பட்டிருந்தது. | பணிப்பாளர் (நிருவாகம்) பதவிக்கு ஆட்சேர்ப்பு தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்டிருந்த கணக்காய்வு ஐயவினாக்களுக்கான விடயங்கள் வெகுசன ஊடக அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுப் பரிசோதனை பரிந்துரையின் படி ஆரம்ப விசாரணையொன்று மேற்கொள்ளப்பட்டது. அந்தப் பரிந்துரை மே 16 திகதி நடைபெறும் முகாமைத்துவ சபைக் கூட்டத்திற்கு சமர்ப்பித்து தொடர் நடவடிக்கை தீர்மானிக்கப்படும். | தாபனக் கோவையின் ஏற்பாடுகளுக்கு இணங்க செயற்பட வேண்டும். |